
திருவள்ளுவர்

## திருக்குறள்

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

அதிகாரம் - 51 - தெரிந்து தெளிதல்

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஜனவரி செய்திமடல்

( மார்கழி - தை )

ஒருவரின் குணங்களையும், அவரது குறைகளையும் ஆராய்ந்து பார்த்து அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு அவரைப் பற்றிய ஒரு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

Weigh a man's merits and also his defects.
Whichever weighs more is his nature.

## பள்ளியின் அறிவிப்புகள் !!

அமெரிக்க தமிழ்க் கல்விக்கழகம் நடத்திய மெய்நிகர் போட்டியில் இறுதிப் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் பரிசு கிடைத்தது. இது நம் தமிழ்ப்பள்ளிக்குப் பெருமையானத் தருணம்:

பரிசு பெற்றவர்களின் விவரம்:

1. திரு. அரவிந்த் பழனிசுவாமி (ஆசிரியர்) – கவிதைப்போட்டி- 2 வது இடம்
2. திருமதி. கவிதா முருகேசன் (ஆசிரியை) – பேச்சுப்போட்டி - 2 வது இடம்
3. கன வீணா வினோத்குமார் (நிலை 5 மாணவி) - செய்யுள் போட்டி – 4 வது இடம்

பொங்கல் திட்ட அறிவிப்பு – பொங்கல் விழாவையொட்டி மாணவர்கள் தங்களது படைப்புக்களை ஜனவரி 24 ஆம் தேதி சமர்ப்பிக்குமாறு கேட்டுகொள்கிறோம்!

## பள்ளி அட்டவணை ஜனவரி மாதம்

January 25

| Su | M | Tu | W | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

RITamilSchool Calendar

1) இளமையில் கல்
2) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

## தன்னம்பிக்கை !

நான் கடவுளிடம் கேட்டேன், என்னோட வாழ்க்கையை நான் எப்படி வழி நடத்துவது என்று. கடவுள் சொன்னார், உன் அறையில் பார் என்று. என் அறைக்குச் சென்றேன் எல்லா பதிலும் அங்கு எனக்கு கிடைத்தது.



மேற்கூரை சொன்னது..உன் எண்ணங்களை உயர்வாக வை என்று.
காத்தாடி சொன்னது.. என்ன மாதிரி குளிர்ச்சியா கூலா இரு என்று.
கடிகாரம் சொன்னது..நேரத்தை மதிக்கனும் என்று.
காலண்டர் சொன்னது.. என்னை மாதிரி உன்னையும் தினமும் புதுப்பித்துக்கொள் என்று.
மணிபர்ஸ் சொன்னது வருங்காலத்துக்காகச் சேமித்துக்கொள் என்று. கண்ணாடி சொன்னது...உன்னை மட்டும் பார் என்று.
விளக்கு சொன்னது.. என்னை மாதிரி அடுத்தவர் வாழ்வில் ஒளி ஏற்று என்று.
ஜன்னல் சொன்னது..பறந்த மனப்பான்மையாக இரு என்று.
தரை சொன்னது.. எப்போதும் கீழே பணிவாக இரு என்று.
படிக்கட்டு சொன்னது..வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் ஏறும் போதும் கவனமாக அடி எடுத்து வை என்று.

இது போல வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்து வந்தால் மிக உயர்ந்த நிலைக்கு வரலாம்.

# அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் தின நல்வாழ்த்துக்கள் !!!

நீ இன்று செய்யும் சின்ன சின்ன முயற்சிகளே நாளைய வெற்றியின் ஆணிவேர்கள்.

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# ஜனவரி செய்திமடல்

( மார்கழி - தை )

The small efforts you put today are the roots of your tomorrow's success!

## முத்தமிழ் முத்துக்கள்

### வர்மக்கலை





வர்மக்கலை தமிழ் மரபில் தோன்றிய ஒரு கலையாகும். வர்மக்கலை என்பது உடலின் முக்கிய நாடிகள், நரம்புகள் அல்லது புள்ளிகளை பற்றிய அறிவை மையமாக கொண்ட ஒரு தற்காப்புக் கலையாகும். கரமடி, உடல் அசைவுகள், ஆயுதங்களை உபயோகித்து சண்டை ஆகிய அம்சங்களும் இதில் அடங்கும்.

உடல் சீராக இயங்குவதற்காக உடலின் 108 இடங்களில் நின்று இயங்கும் உயிர்நிலைகளே வர்மங்கள் எனப்படும். இந்தக் குறிப்பிட்ட சில நரம்புகளில், குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட அளவில் தட்டுப்பட்டால் ஒருவர் உணர்விழப்பர். அந்தக் குறிப்பிட்ட இடங்களே வர்மம் எனப்படும்.

முற்காலத்தில் குரு-சிஷ்ய முறையில் கற்பிக்கப்பட்ட இக்கலையை, தவறாக பயன்படுத்தியன் காரணமாக இது குருக்காளால் கற்பிக்கப்படாமல் முற்றிலுமாக அழியும் நிலையை எட்டிவிட்டது.

## நினைவு நாளேடு

### பொங்கலோ பொங்கல்

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம். பொங்கல் விழா, மக்களால் இயல்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா.

பொங்கல் விழா நான்கு நாட்கள் நடைபெறும். இந்த நான்கு நாட்களும் போகி, தைப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. போகி பண்டிகை என்பது பழையன கழித்தல். தை மாத முதல் நாள் பொங்கல் கொண்டாடப்படுகிறது. உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் மாட்டிற்கு நன்றி கூறும் நாளே மாட்டுப் பொங்கல். காணும் பொங்கல் நாளில் மக்கள் தங்கள் உற்றார் உறவினரைச் சென்று சந்தித்து தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர்.

### இந்திய குடியரசு தினம்

ஆகஸ்ட் 15, 1947 இல் இந்தியா ஒரு சுதந்திர நாடாக மாறினாலும், ஜனவரி 26, 1950 அன்று அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம் அது தன்னை இறையாண்மை, ஜனநாயக மற்றும் குடியரசு நாடாக அறிவித்தது.

அரசியலமைப்பின் மூலம், நாடு அதிகாரப்பூர்வமாக இந்திய குடியரசு என்று அறியப்பட்டது மற்றும் அதன் படி "அதன் குடிமக்கள் அனைவருக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை பாதுகாக்கிறது". குடியரசு தினம் ஆண்டுதோறும் தலைநகரான புது டெல்லியில், மறைந்த இந்தியப்படை வீரர்களுக்காக வீரவணக்கம் செலுத்துவதுடன் தொடங்கி, மூவண்ணக் கொடியை ஏற்றி படைவீரர்களின் அணிவகுப்புடன் கொண்டாடப்படுகிறது.

## ஜனவரி மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

- எவ்லின் வினோத்
- சாய்னா இரவிக்குமார்
- மாயோன் மாக்காத்தை சரவணன்
- ஸ்ரீ பெரியநாயகி அடைக்கப்பன்

ஜனவரி மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

## பழமொழி !!

"யானைக்கும் அடி சறுக்கும் "

பொருள் :

மிக பெரிய உருவம் கொண்ட யானை, நடக்கும்போது வலுவாக தன் கால்களை பூமியில் பதிக்கும், அப்படி பதிக்கும்போது சற்று கவனக்குறைவாக இருந்தால் அது சறுக்கி விழுந்துவிடும். அப்படி விழுந்தால் அதற்கு அடி பலமாக ஏற்படலாம்.
அதுபோல மனிதர்களாகிய நாம் எவ்வளவு புத்தாசாலியாக அல்லது பலசாலியாக இருந்தாலும் நாம் செய்யும் காரியத்தில் சற்று சிறு கவனக்குறைவு ஏற்பட்டாலும், நம் முன்னேற்த்திற்கு அது முட்டு கட்டையாக அமைந்துவிடும்.
ஆகையால் நாம் வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிக கவனமாக எடுத்து வைத்து முன்னேற வேண்டும்.

## தமிழ் கவிதை !!

தமிழால் இணைந்தோம்

பல நாடு கடந்து வந்தோம்

நாட்டுப்பற்றை சுமந்து வந்தோம்

நம் மக்கள் தேடிச் சென்றோம்

தமிழ் சங்கங்களை கண்டோம்

குடும்பங்கள் இணைந்து கொண்டாடினோம்

பண்டிகைகளை -
குடும்பங்கள் இணைந்து கொண்டாடினோம்

பலர் முன்வந்து கற்பிக்கக் கண்டோம்

எங்கள் குழந்தைகளை கற்க அனுப்பிவைத்தோம்

பிள்ளைகள் தமிழ் கற்குதம்மா!

தமிழ் வளருதம்மா!

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! வளர்க தமிழ்த்தொண்டு!

- திருமதி. ஐஸ்வர்யா மனோத்
  தன்னார்வலர் & நிலை 5 மாணவரின் பெற்றோர்

## கண்டுபிடியுங்கள் !

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ற | க | ற் | ற | ல் | ச | டி | ற் |
| ள | ஈ | ஞ | ங | த் | கா | ஓ | ஆ |
| ஓ | ப | ணா | க | மா | அ | த | ர |
| ச | ய | ம் | ப | பா | ட | ம் | ல் |
| ம் | ம | எ | ப | க | டி | தா | மா |
| க | ண் | ணா | டி | ர | ள | ம | ஞ |
| ம | ர | ம் | ஈ | அ | ம் | கு | ஈ |
| தா | த் | தா | ம் | ர | த | டி | த் |

கற்றல் காதல்
பாடம் மகுடி
பம்பரம் கண்ணாடி
தாத்தா அம்மா மரம்

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை 15-ஆம் தேதிக்குள் NEWSLETTER.RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணையதளம்: HTTPS://WWW.RITAMILSCHOOL.ORG/
முகநூல்: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL